00120

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 06

LLU 6715/LWU4323 - தொழிற்சட்டம்

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II 2023/2024

காலம் : ஒரு (01) மணித்தியாலங்கள்

திகதி : 08.01.2025 நேரம்: பி.ப. 03.30 - பி.ப. 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. வரையறுக்கப்பட்ட MBT தனியார் ஊடக நிறுவனத்தின் பணியாட்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையில் வேலை நேரத்தின் போது தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதலை தடைசெய்வதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கம்பனி கொள்கை தொடர்பில் பிணக்கு ஒன்று எழுந்தது. கம்பனியினுடைய முகாமைத்துவம் கொள்கையை மாற்ற விரும்பாததுடன் எவ்வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபட மறுக்கிறது. ஆகவே பணியாட்கள் தொழில் ஆணையாளருடைய தலையீட்டின் மூலம் பிணக்கினை சமரசம் செய்ய விரும்புகின்றனர்.

   தொழில் ஆணையாளரின் தலையீட்டுடன் பணியாட்களுடைய பிணக்கை தீர்த்து வைப்பதற்கு கைத்தொழில் சட்டத்தின் கீழ் உள்ள பொருத்தமான பொறிமுறைகளை ஆராய்க. உமது விடை நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டத்துடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

   (20 புள்ளிகள்)

2. (அ) "கைத்தொழில் பிணக்குகளின் சட்டத்தின் கீழ் கைத்தொழில் பிணக்கு ஒன்றை கட்டாய நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்த தொழில் அமைச்சருக்கு எல்லையற்ற தற்துணிவு உள்ளது."
   மேற்குறிப்பிட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் நீதிமுறை பொருட்கோடல் என்பவற்றிற்கு விசேட அவதானம் வழங்கி உமது விடைக்குரிய காரணங்களைத் தருக.

   (12 புள்ளிகள்)

(ஆ) இலக்கம் 43. 1950 ஆண்டின் இலங்கை கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் 'தொழில் தருநர்' என்ற பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலை விளக்குக.

இங்கு வழங்கப்பட்ட பொருள் கோடல் குறிப்பிட்ட சட்டத்தின் பிரயோக எல்லையை விரிவாக்கும் என நீர் கருதுகிறீரா? பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பவற்றைக் குறிப்பிட்டு ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -